ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2199/9 - 2020 ඔක්තෝබර් මස 27 වැනි අඟහරුවාදා - 2020.10.27

*2199/9 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மத்திய மாகாண மாகாண சபை

*மத்திய மாகாண கௌரவ ஆளுநரின் அறிவித்தல்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பந்தியுடன் வாசிக்க வேண்டிய திருத்தப்பட்ட நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 184 (1) (1அ) ஆம் பந்தியின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய மத்திய மாகாண ஆளுநர் வழக்கறிஞர் லலித் யூ. கமகே ஆகிய நான், தலவாக்கலை லிந்துல நகர சபையின் தலைவர் மூலம் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட நகர சபை கட்டளைச் சட்டத்தின (255 ஆம் அத்தியாயம்) 184 (1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன்படி தவறுகள் ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக இவ் விளம்பர தினம் தொடக்கம் மூன்று மாத கால வரையறைக்குள் பரிசீலனை செய்து எனக்கு அறிவிப்பதற்காக ஓய்வுபெற்ற நீதித்துறை உத்தியோகத்தர் சரோஜினி குசலா வீரவர்தன அவர்களை இங்கு நியமிக்கின்றேன்.*

*இவ் உத்தியோகத்தர்களுக்கு இப் பரிசீலனை தொடர்பாக பரிசீலனை ஆணைக்குழு சட்டத்தின் கீழ் நியமிக்கப்படுகின்ற ஆணைக்குழுவுக்கான அதிகாரங்கள் உள்ளன.*

வழக்கறிஞர் **லலித் யூ. கமகே,**
மத்திய மாகாண ஆளுநர்.

*கண்டி,*
*2020, ஒற்றோபர் 26.*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**மத்திய மாகாண மாகாண சபை**

மத்திய மாகாண கௌரவ ஆளுநரின் அறிவித்தல்

***1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பந்தியுடன் வாசிக்க வேண்டிய நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 184(1)(1ஆ)(அ)(i) ஆம் பந்தியின் கீழ் மேற்கொள்ளப்படும் கட்டளை***

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பந்தியுடன் வாசிக்க வேண்டிய நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 184 (1) (1ஆ) (அ) (i) ஆம் பந்தியின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய மத்திய மாகாண ஆளுநர் வழக்கறிஞர் லலித் யூ. கமகே ஆகிய நான், தலவாக்கலை லிந்துல நகர சபையின் தலைவராகிய அனகிபுர அசோக சேபால அவர்களை அப் பதவி வகிப்பதனை உடனடியாக செயற்படும் வகையில் தற்காலிகமாக இடைநீக்கம் செய்கின்றேன்.*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பந்தியுடன் வாசிக்க வேண்டிய நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 184 (1)(1ஆ) (அ) (i) ஆம் பந்தியின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய உடனடியாக செயற்படும் வகையில் மத்திய மாகாணத்தின் நுவரெலியா மாவட்டத்திற்கு தலவாக்கலை லிந்துல நகர சபைத் தலைவரின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் மற்றும் அதன் அதிகாரங்களினை செயற்படுத்துவதற்கும் நுவரெலியா மாவட்டத்தின் தலவாக்கலை லிந்துல நகர சபையின் தற்போதைய பிரதி தலைவர் பதவியில் கடமைபுரியும் லெட்சுமண் பாரதிதாசன் அவர்களை நியமிக்கின்றேன்.*

வழக்கறிஞர் **லலித் யூ. கமகே,**
*மத்திய மாகாண ஆளுநர்.*

*கண்டி,*
*2020, ஒற்றோபர் 26.*